**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அ.வ.எண். 366/2024 நாள்-22.07.2026

சா.சா.1

இந்திய சாட்சியச் சட்டம் 1872 பிரிவு 44 ன் படி ஆணையிட்டு பிரமாணம் உறுதி செய்யப்பட்டு சாட்சியின் முதல் விசாரணை வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்-வீரமணி | தந்தையின் பெயர்- |
| விலாசம்- | தாலுகா- |
| வயது- | தொழில் |

**முதல் விசாரணை**

நான் இராஜபாளையம் நகராட்சியில் நகர சார்ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததன் பெயரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இராஜபாளையம் நகராட்சி டவுண் சர்வே எண்.34 ன் பழைய வருவாய் சர்வே எண்.264/17 pt ஆகும். அடங்கலில் இராமசாமி நாடார் மகன் சோலைமலை நாடார் என்பவர் பெயரில் தாக்கலாகி இருந்தது தற்போது சோலைமலை நாடார் மனைவி மீனம்மாள் பெயரில் இருந்து வருகிறது. **ஆரம்ப நகர அளவை பதிவேடு சா.சா.ஆ.1- ஆக குறியீடு செய்யப்படுகிறது.** துணை நகர அளவை பதிவேடு நகலை தாக்கல் செய்கிறேன். டவுண் சர்வே எண்.34 - சோலைமலை நாடார் மனைவி மீனம்மாள் என்பவர் பெயரில் பதிவாகியுள்ளது. **துணை நகர அளவை பதிவேடு சா.சா.ஆ.2- ஆக குறியீடு செய்யப்படுகிறது.** டவுண் சர்வே எண். 34 க்கான கதவு எண்.37 என்று காட்டப்பட்டுள்ளது. சா.சா.ஆ.1-ன் கதவு

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

எண்.4/37 என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**குறுக்கு விசாரணை 1ம் பிரதிவாதி தரப்பில்**

ஆரம்ப நகர அளவை இராஜபாளையத்தில் 1977 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 1989 ம் ஆண்டு முடிவடைந்தது. ஆரம்ப நகர அளவை 1989 ம் ஆண்டிலிருந்து அமலுக்கு வந்தது என்றால் சரிதான். துணை நகர அளவை 1989 ம் ஆண்டு ஆரம்பித்து 1997 ல் முடிவடைந்தது. எனது முதல் விசாரணையில் கூறியுள்ள டவுண் சர்வே எண்.34 ஆரம்ப நகர அளவையிலும், துணை நகர அளவையிலும் ஒரே எண்ணாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆரம்ப நகர அளவையில் டவுண் சர்வே எண்.34 ன் அதற்கு முந்தைய வருவாய் சர்வே எண்.264 /17 pt ஆகும். சர்வே எண்.264 இனாம் நிலமாக இருந்தது என்றும், அது சம்பந்தமாக விசாரணை இனாம் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் விசாரணையில் நிலுவையில் இருந்தது என்றும் விசாரணையில் இருந்த போது இனாம் நிலத்தை ரயத்துவாரி என்று பதிவு செய்தது தவறு என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.